[1996 பிப்ரவரி 22]

கேட்டு. அதற்குப் பின்னர். சிறுசேமிப்பில் முதலீடு செய்ய அவர்களுக்கு அறிவுரை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 89, திரு. வீ. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

89—

ஆரம்பப் பள்ளி துவக்குதல்

***21245**— திரு. வீ. சுப்பிரமணியன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள பூஞ்சோலை குப்பத்தில் புதிதாக ஆரம்பப் பள்ளி துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாணை நிலை எண் 761, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், நாள் 12-8-1993-ன்படி மேற்படி கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள பூஞ்சோலை குப்பத்தில் 1993-94-ம் கல்வி ஆண்டில் 25-10-1993 அன்று புதிதாக ஆரம்பப் பள்ளி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் உள்ள பூஞ்சோலை குப்பத்தில் புதிதாக ஓர் ஆரம்பப் பள்ளி, 1993-லே ஆரம்பிக்கப்பட்டு, நடந்து கொண்டு இருக்கிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், நிச்சயமாக கோரிக்கைகள் வைக்காமலேயே, காரியங்களைச் செய்து முடிக்கின்ற இந்த ஆட்சியில், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தமைக்கு என்னுடைய நன்றியை அந்தத் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 90, திரு.எம். பூராசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.